மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் கல்வியாண்டில் இது குறித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 497 திரு கே. கந்தசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

497—

சேலம் அருங்காட்சியகத்தை நவீனப்படுத்துதல்

*22613—திரு. கே. கந்தசாமி:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் அரசு அருங்காட்சியகத்தை பள்ளி மாணவ மாணவிகளை ஈர்க்கும் வகையில் நவீனப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்ட அரசு அருங்காட்சியகத்திற்குப் போதிய வசதியுடன் கூடிய கட்டடம் கிடைக்கப் பெற்றதும் அதை நவீனப்படுத்த அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்.

முற்பகல் 11.00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப் படுகிறது.

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அருங்காட்சியகம் செயல்படும் கட்டடம் நல்ல நிலையில்தான் உள்ளது. நல்ல கட்டடமாகத்தான் இருக்கிறது. ஆனால் அங்கே வரலாற்றுச் சிற்பங்கள் சேரன் செங்குட்டுவன் காலத்து சிற்பங்கள், ஓலைச் சுவடிகள், செப்புத் தகடுகள் போன்றவை எல்லாம் அந்த அருங்காட்சி யகத்திலே வைக்கப்பட்டுள்ளன. அந்தச் சிற்பங்கள் எல்லாம் கண்ணாடிப் பேழையில் வைக்கப்படாமல் வெறுமனே வைக்கப் பட்டுள்ளதால், அவை காலப்போக்கில் அழிந்துவிடும் சூழ் நிலை ஏற்பட்டுள்ளது. அவற்றை நல்ல நிலையில் பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1994 மே 3]

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே இருக்கிற அருங்காட்சியகத்திலே இருக்கிற சிலைகள் போன்றவற்றை எல்லாம் நல்ல முறையிலே பாதுகாக்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆண்டு நிதியை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். இதைப்போலவே ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் இருக்கிற அருங்காட்சியகங்களில் எல்லா வசதிகளையும் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வரவர்கள் அறிவுறுத்தி இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. சேலம் மாவட்ட அருங்காட்சியகத்திற்கும் இது போன்ற வசதிகள் செய்வதற்கு அரசு ஆராய்ந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த பல நூற்றாண்டுகளாகக் கிடைக்கப் பெற்ற அறிய பொக்கிஷங்கள், பொருள்கள் எல்லாம் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் பொறுப்பில் உள்ளன. அவைகளைப் பெற்று அரசு அருங்காட்சியகத்தில் வைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காகத்தான் அனைத்து வசதிகளும் அமைந்த நல்ல கட்டிடம் தேடப்பட்டு வருகிறது. அது கிடைத்தவுடன், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் இருக்கிற அந்தப் பொருள்களையும் அருங்காட்சியகத்திற்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 498, திரு. எம். ஆண்டி அம்பலம், இருக்கையில் இல்லை. திரு. ஓ.எஸ். அமர்நாத், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

498—

மதுரை, கோவை, திருச்சி நகரங்களின் முக்கிய சாலைகளில் சுரங்கப் பாதை அமைத்தல்

*11187—திரு. எம். ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பார்ரா—

(அ) மதுரை, கோவை, திருச்சி ஆகிய நகரங்களில் பிரதான சாலைகளில் சென்னை நகரில் அமைக்கப்பட்டுள்ளது போல் சுரங்கப்பாதை அமைக்க அரசு பரிசீலனை செய்யுமா?